අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் நாயகம்
Director General
+94-081-2388195
E-mail : dgdaph@sltnet.lk

# සත්ත්ව නිෂ්පාදන හා සෞඛ්‍ය දෙපාර්තමේන්තුව
# கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
# Department of Animal Production and Health

කාර්යාලය
அலுவலகம்
Office
+94 081-2388120
184/189/337/462
Web : www. daph.gov.lk

මගේ අංකය/எனது இலக்கம் : DAPH/AD/20/03/05 ඔබේ අංකය/உமது இலக்கம் : දිනය/திகதி : 2024.07.05

1. செயலாளர், சுகாதார அமைச்சு
2. செயலாளர், விவசாய அமைச்சு – கால்நடைவள பிரிவு
3. (மேல்/மத்திய/வடக்கு/கிழக்கு/வடமேல்/வடமத்திய/ஊவா/சப்ரகமுவ/தென்) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாக,
   மேல்/மத்திய/வடக்கு/கிழக்கு/வடமேல்/வடமத்திய/ஊவா/சப்ரகமுவ/தென்மாகாண பிரதான செயலாளர் ஊடாக,
   மேல்/மத்திய/வடக்கு/கிழக்கு/வடமேல்/வடமத்திய/ஊவா/சப்ரகமுவ/தென்மாகாண மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக,
   மேல்/மத்திய/வடக்கு/கிழக்கு/வடமேல்/வடமத்திய/ஊவா/சப்ரகமுவ/தென்மாகாண மாகாண கா.உ.சு.திணைக்களத்தின் பணிப்பாளர் ஊடாக,
4. பணிப்பாளர் நாயகம் தேசிய விலங்கியல் திணைக்களம்
5. பணிப்பாளர் நாயகம், வனஜீவ பாதுகாப்பு திணைக்களம்
6. நகர ஆணையாளர், கொழும்பு/கண்டி/ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை/தெஹிவல-கல்கிஸ்ஸ/மொரட்டுவ/நீர்கொழும்பு/கடுவலை/கம்பஹ/யாழ்ப்பாணம்/அனுராதபுரம் மாநகர சபை
7. பணிப்பாளர், கால்நடை சுகாதாரம்/கால்நடை இனவிருத்தி/கால்நடை ஆராய்ச்சி/மனிதவள அபிவிருத்தி/திட்டமிடல் பொருளாதாரம்/விலங்கு சட்ம் ஒழுங்கு – கா.உ.சு. திணைக்களம்.
8. பிரதான முகாமை சேவை உத்தியோகத்தர் - பணிப்பாளர் நாயகம் பணிமனை

**இலங்கை கால்நடை உற்பத்தி சகாதார சேவையின் வருடாந்த இடமாற்றல் - 2025**

அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரதது இலக்கம் PSC/ET/4/3/5 மற்றும் 2011.12.22 ஆம் திகதிய கடிதத்தினால் அனுமதிக்கப்பட்ட இ.கா.உ.சு.சேவையின் இடமாற்றல் செயன்முறைக்கு அமைய இ.கா.உ.சு.சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அதற்கு அமைய உங்களது அமைச்சில்/திணைக்களத்தில்/அலகின் கீழ் உள்ள சகல சேவை நிலையங்களுக்கும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள இ.கா.உ.சு.சேவைக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களது இடமாற்றல் விண்ணப்பங்களை மாதிரிப்படிவம் I இற்கு அமைய பெற்றுக் கொண்டு இடமாற்றல் தொடர்பான உங்களது சிபாரிசைக் குறிப்பிட்டு உப அட்டவணை தயாரித்து 2024.07.31 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

2024.06.30 ஆம் திகதி ஆகின்ற போது

- அதி கஷ்டப் பிரதேச சேவை நிலையம் ஒன்றில் (D) - ஆகக் குறைந்தது இரண்டு வருடம் சேவை செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு இடமாற்றல் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.
- கஷ்டப் பிரதேச சேவை நிலையம் ஒன்றில் (C) - ஆகக் குறைந்தது மூன்று வருடம் சேவை செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு இடமாற்றல் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.
- விருப்பத்திற்குறியதல்லாத சேவை நிலையம் (B) - ஆகக் குறைந்தது நான்கு வருடம் சேவை செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு இடமாற்றல் பொருட்டு விண்ணப்பிக்கலாம்

எந்தவொரு சேவை நிலையத்திலும் 05 வருடங்கள் சேவை செய்து இருக்கும் உத்தியோகத்தர்/மாகாணத்தினுள் 10 ஆண்டுகள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பின் அவ்வுத்தியோகத்தர் கட்டாயம் இடமாற்றலுக்கு உட்படுத்தப்படுவார்.

03. வருடாந்த இடமாற்றலுக்கு விண்ணப்பிக்காத விருப்பத்திற்குறிய சேவை நிலையம் ஒன்றில் 5 வருடங்களுக்கும் மேலாக சேவை செய்யும் உத்தியோகத்தர்கள்/மாகாண சபை ஒன்றினுள் 10 வருடங்களுக்கும் மேல் அதிக சேவைக் காலத்தை கொண்ட உத்தியோகத்தர்கள் தாம் இடமாற்றலை எதிர்பார்க்காதவிடின் தாம் இடமாற்றல் பெற்றுச் செல்ல விரும்பும் அல்லது எதிர்பார்க்கும் சேவை நிலையத்தை குறிப்பிட்டு மாதிரிப் படிவம் II இற்கு அமைய தகவல்களைப் பெற்ற அலகுத் தலைவரின் சிபாரிசுடன் உரிய திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

04. மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவம் II இற்கு அமைய விண்ணப்பம் சமர்ப்பித்த மற்றும் சமர்ப்பிக்காத ஒரு சேவை நிலையத்தில் 5 வருடங்களுக்கும் மேலாக சேவை செய்யும் உத்தியோகத்தர்கள்/மாகாண சபையினுள் 10 வருடங்களுக்கும் மேல் அதிக சேவைக் காலத்தை கொண்ட இ.கா.உ.சு.சேவை உத்தியோகத்த்கள் யாவரினதும் சகல தகவல்களையும் மாதிரிப் படிவம் III இற்கு அமைய உப அட்டவணைக்கு அமைய சரியாக பூரணப்படுத்தி உரிய திகதிக்கு முன்னர் சான்றுபடுத்தி எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதிக (சேவைக் காலத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களது பெயர் முதலில் குறிப்பிட்டு ஏனைய பெயர்கள் சேவைக் காலத்திற்கு ஏற்ப குறிப்பிடவும்) கல்வி நடவடிக்கைக்காக அனுமதிக்கப்பட்ட விடுமுறை சம்பளத்துடன்/சம்பளமற்ற அடிப்படையில் பெற்றுள்ள உத்தியோகத்தர்களது அத்தகைய சேவைக் காலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணிப்பிடும் போது 05 வருடங்களுக்கு அதிகரிக்குமாயின் உப அட்டவணை இலக்கம் III இற்கு அவர்களது பெயர் உட்படுத்தப்பட வேண்டும்

*அனுமதிக்கப்பட்ட சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்ட காலப்பகுதி விடுமுறை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் சேவைப் புரிந்த உரிய சேவை நிலையத்தின் சேவைக் காலமாக கணிக்கப்படும். அனுமதிக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறை பெற்ற காலப்பகுதி விடுமுறை அனுமதிக்கின்ற போது சேவைப் புரிந்த சேவை நிலையம் சேவைக் காலமாக கணிக்கப்பட மாட்டாது.

05. இவ்விடமாற்றல் தொடர்பில் விண்ணப்பம் கோரப்படும் போது பயன்படுத்தப்படுகின்ற அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரது இலக்கம் PSC/ET/4/3/5 மற்றும் 2011.12.22 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய அனுமதிக்கப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் இடமாற்றல் செயன்முறை மற்றும் சேவை நிலைய வகைப்படுத்தலின் I, II, III, IV இலக்கம் கொண்ட மாதிரிப் படிவங்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.daph.gov.lk இன் ஊடாக பதிவிறக்கம் செய்ய முடியும்.

06. இது தொடர்பில் உங்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள இ.கா.உ.சு.சேவையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியக் கொடுக்குமாரு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

07. இடமாற்றல் செயன்முறையில் 13 ஆவது பந்தி இற்கு அமைய இடமாற்றலுக்கான நேரசூசி

| | | |
|---|---|---|
| அ). இடமாற்றல் விண்ணப்ப முடிவுத் திகதி | : | 2024.07.31 |
| ஆ). அலகுத் தலைவர்கள் தகவல் வழங்க வேண்டிய இறுதித் திகதி | : | 2024.08.12 |
| இ). இடமாற்றல் கட்டளை பிறப்பித்தல் | : | 2024.09.12 |
| ஈ). இடமாற்றலுக்கு எதிராக மனு சமர்ப்பித்தல் இறுதித் திகதி | : | 2024.09.27 |
| உ). மனு தீர்மானத்திற்கு அமைய இறுதி இடமாற்றல் கட்டளை பிறப்பிப்பு | : | 2024.11.01 |
| ஊ). வருடாந்த இடமாற்றல் செயல்வலுப் பெறும் திகதி | : | 2025.01.01 |

08. உங்களது மேற்பார்வையின் கீழ் உள்ள அமைச்சின், திணைக்களத்தின், நிறுவனத்தின், அலகின் 2024.07.20 ஆம் திகதி அன்று நிலவும்/நிலவுவதற்கு உள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் பிரதிப் பணிப்பாளர் தரத்திற்கு கீழ் உள்ள பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு 2024.07.20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

| பதவி | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ள எண்ணிக்கை | வெற்றிடமாகியுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் காணப்படும் சேவை நிலையம் |
|---|---|---|---|---|
| | | | | |

ஒப்பம் : **கலாநிதி. கே.ஏ.சீ.எச்.ஏ.கொத்தலாவல**

கா.உ.சு.பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

1. சகல கா.உ.சு.தி.பணிப்பாளர்கள்
2. கௌரவ செயலாளர், கால்நடை வைத்தியர் சங்கம்
3. கௌரவ செயலாளர், கால்நடை உத்தியோகத்தர் சங்கம்
4. கௌரவ செயலாளர், வனஜீவ மிருக வைத்தியர் சங்கம்

} தகவலுக்காக